[1979 மார்ச் 5

கூட்டுறவு கடன்களைத் திருப்பிச் செலுத்தல்

*வினா எண் 222—திரு மா. மணிமாறன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் இயற்கைச் சீற்றத்தால் பாதிப்பிற்கு உட்படும் போது அவர்கள் விவசாய கூட்டுறவுச்சங்கங்களில் பெற்ற கடன்களை திருப்பிக் கட்டுவதில் ரிசர்வ் வங்கி ஏதேனும் சலுகை அளிக்கிறதா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: ஆம். புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றத்தால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது வருவாய்த் துறையினரால் வழங்கப்படும் அனாவாரி சான்றிதழைப் பொறுத்து ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் குறுகிய காலக் கடன்கள் விகிதாசாரத்தில் 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய நடுத்தரக் காலக் கடனாகவும், அடுத்த ஆண்டிலும் பாதிக்கப்பட்டால் மாற்றப்பட்ட குறுகிய காலக் கடன்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்படாமல் மேலும் இரண்டாண்டுகளில் திருப்பிச் செலுத்தும் படியும் திருத்தி யமைக்கப்படுகிறது.

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றம் என்று சொல்லப்படுகிற போது புயல், வெள்ளம் இவற்றைத்தான் குறிப்பிடுகிறீர்கள். சில நேரத்தில் அதுவும் விவசாயிகள் அறுவடை செய்யும் நேரத்தில் கல் மழை எதிர்பாராமல் பெய்து மிகுந்த நஷ்டத்தை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி விடுகிறது. அப்படிப்பட்ட நேரத்திலும் இப்படிப்பட்ட சலுகைகளை அரசு விவசாயிகளுக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, புயல் வெள்ளத்திற்கு மட்டும் அல்ல. வரட்சி போன்ற இயற்கை உற்பாதங்களுக்கும் இந்த சலுகை அளிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்த உற்பாதத்தையும் அரசு கவனத்தில் வைத்துக் கொள்ளும்.

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ளம் வறட்சி போன்ற இயற்கையின் சீற்றத்தால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது, இக்குறுகிய காலக் கடன்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்படாமல், இரண்டாண்டுகளில் திருப்பிச் செலுத்தும்படி திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. விவசாயிகள் கடனை திருப்பிச் செலுத்தாவிட்டால், அவர்கள் கடன் எப்படி பைசல் ஆகும்

என்பதை பரிசீலித்து, இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் நஷ்டங்களுக்காக கடன்களை தள்ளுபடி செய்ய நடவடிக்கைகள் அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–20]

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, இரண்டு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் வறட்சியால் அல்லது வேறு வகையில் பாதிக்கப்பட்டு இருந்தால் குறுகிய காலக் கடன்களாகஇருப்பவைகளை நீண்டகாலக் கடன்களாக மாற்றியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமனாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்தாற்போல் மூன்று ஆண்டு காலமாக வறட்சி இருக்கிறது. இரண்டுஆண்டு காலமாக புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கேயுள்ள விவசாயிகள் எந்தவிதமான கடனையும் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அரசு கடனை தள்ளுபடி செய்து நிவாரணம் அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய நிலவரப்படி தள்ளுபடி என்ற பிரச்னைக்கு இடமில்லை. கடன்கள் மாற்றி வைக்கப்படுகின்றன. ஒத்தி வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை நாங்கள் பரிசீலனை செய்கிறோம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, கடன்களைத் திருப்பிக் கட்டுவதில் ரிசர்வ் வங்கி ஏதேனும் சலுகை அளித்துள்ளதா என்பது கேள்வி. அதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அமைச்சர் அதற்கு தற்போதுள்ள நிலையைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு புதிய சிக்கல் இந்த ஆண்டு ஏற்பட்டு இருக்கிறது. இதுவரையில் இப்படிப்பட்ட புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிப்பு ஏற்படுகிறபோது, ரிசர்வ் வங்கி ஏறத்தாழ 85 விழுக்காடு வரையில் கடன் கொடுத்து வந்தது. ஆனால் இந்த ஆண்டு முதல் அதாவது 1978–79 முதல் அந்தக் கொள்கையை மாற்றி அமைத்து, இனிமேல் 60 விழுக்காடுதான் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 60 விழுக்காடு போக மீதி இருக்கின்ற 40 விழுக்காடு தமிழ்நாடு கூட்டுறவு வங்கி-மாநில கூட்டுறவு வங்கி-மாநில அரசு, மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவை முறையே 10, 15, 15 என்ற விழுக்காடு விகிதத்தில் ஏற்கவேண்டும் என்று

அறிவித்து இருக்கிறது. அரசு இதனை பரிசீலனை செய்து அறிவிப்பு செய்திருக்கிறது. அதை ரிசர்வ் வங்கி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. மத்திய சர்க்காரும் அதே போல் திட்டக் குழுவில் நாம் சொன்ன பரிந்துரையை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் பெற்று இருக்கக்கூடிய கடன்களில் சில சலுகைகளை அளித்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எப்படி அதிக பாதிப்பு இருக்கிறதோ அதை விட மிகக் கடுமையாக பூச்சி தாக்குதல் ஏற்பட்டு, அவர்கள் பயிர் முழுவதும் நாசம் ஆகிவிடும் நிலை இருக்கிறது. ஆகவே, அத்தகைய விவசாயிகளுக்கும் இந்த சலுகை முறை ஏதேனும் அளிக்கப்பட்டு வருகிறதா? புதிய கடன்கள் அப்படிப்பட்டவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருள்கூர்ந்து தனிக்கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, விவசாயிகள் இயற்கையின் சீற்றத்தால் பாதிப்பிற்கு உட்படுத்தப்படும்போது, அவர்களுக்கு அளிக்கப்படும் சில சலுகைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி விட்டு அதிலே உள்ள சில சங்கடங்களையும் குறிப்பிட்டார்கள். ஆயினும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பில் இருந்தபோது 1381ம் பசலிக்கு மட்டும் குத்தகை பாக்கி கட்டிவிட்டால் போதும், அதற்கு முன்னாலே எவ்வளவு கட்ட வேண்டியிருந்தாலும், அதைக் கட்ட வேண்டியது இல்லை, அது யாருடைய நிலமாக இருந்தாலும் சரி, தனியாருக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அல்லது கோயில், மடம், ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா, தாங்கள் எப்பொழுதுமே கேள்விகளை ஒன்றாகப் போடுவது இல்லை. விளக்கம் கொடுக்கவே நேரம் அதிகம் எடுத்துக் கொள்கிறீர்கள். அதைப் போலவே மற்றவர்களும் கேட்கிறபோது பிரச்னை எழுகிறது. நீங்கள் ஏறத்தாழ 3–4 நிமிடம் எடுத்துக் கொள்கிறீர்கள். துணைக் கேள்வி போட 3–4 நிமிடம் வேண்டுமா? சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தங்களுக்கு நன்றி.

1979 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா, தாங்கள் நன்றி என்று சொன்னதன் உட்கருத்து என்ன? உறுப்பினர் அப்படிச் சொல்லக்கூடாது. அப்படி பேசக்கூடாது. தயவு செய்து கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா: உட்கருத்து ஒன்றுமில்லை. மன நிறைவோடுதான் நன்றி சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லையென்றால், கேள்வி மட்டும் போடுங்கள்.

திரு. என். கிட்டப்பா: 1381-ம் பசலிக்கு முன்பு பாக்கி எவ்வளவு இருந்தாலும், அந்த நிலம் தனியாருக்குச் சொந்தமாக இருந்தாலும் அல்லது கோயில் மடம் ஆகியவைகளுக்குச் சொந்தமாக இருந்தாலும், அதிலே உழுது பயிரிடும் அத்தனை விவசாயிகளும் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கியை ரத்து செய்து விடுகிறோம் என்று சட்டம் கொண்டு வந்தோம். அப்படிப்பட்ட ஒரு சட்டம் புரட்சித் தலைவர் ஆட்சியில் கொண்டுவந்து நிறைவேற்றப்படுமா? ரிசர்வ் வங்கியிடமும் ஓரளவு சலுகை பெற அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கேள்விக்கு என்னிடத்தில் விவரம் இல்லை. அவர்கள் அருள்கூர்ந்து தனிக் கேள்வி போட்டால் அவசியம் நான் அதற்கு விளக்கம் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இயற்கையினுடைய பாதிப்புகளால் விவசாயிகள் அறவே வருமானம் இல்லாமல் இருக்கும்போது வாங்கிய கடனை பின்னால் 5 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டு— மத்திய வங்கி, ரிசர்வ் வங்கி சம்பந்தப்பட்டிருப்பதால்— தவணை முறையில் வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படும்போது உதவி செய்ய மாநில பட்ஜெட்டில் 5 சதவீதம் வருஷா வருஷம் ஒதுக்கி வைத்து, அதிலிருந்து உதவி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களின் விதிமுறைப்படியே இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும்போது '' கடன் வசதியை நிலைபடுத்துதல் ''— '' அக்ரிகல்சுரல் ஸ்டெபுலேஷன் பண்ட் ''— என்ற வகையிலே இதற்கு ஆவண செய்து வருகிறோம்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடனை, அது குறுகிய கால கடனாக இருந்தால் நீண்ட காலக் கடனாக மாற்றினால் மட்டும்

அவர்கள் வளம்பெற முடியாது. கடனுக்கான வட்டியே குட்டி போட்டு, அது அசலைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு பெருகிவிடுவதால், வட்டியை நீக்கிவிட்டு அசலை மட்டும் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் கடற்கரை,

*வினா எண். 223— திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் பகுதியில் எண்ணூர் வரையுள்ள கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் இத்திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) (ஆ) இல்லை.

திரு. பொ. சிகாமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இத்திட்டம் இல்லை என்று சொன்னார்கள். இத்திட்டத்தை மேற்கொண்டால் மெரினா கடற்கரை போல் வடசென்னை கடற்கரையும் அழகுபெற்று மக்கள் பயனடைய முடியும். இத்திட்டத்திற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் உதவி செய்ய தயாராக இருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு அரசு மேற்கொண்டு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள கடற்கரையில் தொழிற்சாலைகளிலுள்ள கழிவுநீர் மற்றும் அசுத்தநீர் எல்லாம் வந்து கலக்கின்ற காரணத்தால் அதை ஒரு அழகுமிக்க கடற்கரையாக ஆக்குகின்ற வாய்ப்பு இல்லை என்ற கருத்து தற்போது இருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, திருவொற்றியூரிலிருந்து எண்ணூர் வரையில் கடற்கரையே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு வெகுவிரைவிலே நிலைமை ஏற்பட இருக்கிறது. அதற்குக் காரணம் ஆண்டுக்காண்டு கடலரிப்பு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் சென்னை துறைமுகத்திலிருந்து எடுக்கப்படுகிற மணல், சேறு போன்றவை அந்தப்பகுதியில் கொட்